# வட்டி வீத மாதிரி கொள்கை

2022

## நிறுவனம் முழுவதற்கும் பொருந்தும்

இந்த ஆவணம் வட்டி வீத மாதிரிக்கான அளவுகோலாக செயல்படுகிறது

axio என்பது கேப்ஃப்ளோட் ஃபைனான்ஷியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (CapFloat Financial Services Private Limited) உடைய பிராண்ட் பெயர், இது இந்திய ரிசர்வ் வங்கியில் (RBI) பதிவுசெய்யப்பட்ட ஒரு பேங்கிங் அல்லாத நிதி நிறுவனம் (NBFC) ஆகும்.

# உள்ளடக்க அட்டவணை

| உள்ளடக்கம் | பக்கங்கள் |
|---|---|
| I. கடன்களுக்கான வட்டி வீதத்தை தீர்மானிப்பதற்கான கோட்பாடுகள் | 3-7 |
| II. வட்டி வீதம் | 7 |
| III. பேங்கிங் & ஃபைனான்ஸ் கமிட்டி | 7 |
| IV. கொள்கை பற்றிய மதிப்பாய்வு | 8 |

இந்திய ரிசர்வ் வங்கி அதன் ஜனவரி 2, 2009 தேதியிட்ட அறிவிப்பு எண். DNBS. 204 / CGM (ASR) -2009 படி, ஒவ்வொரு NBFC இன் இயக்குனர் சபையும், நிதிச் செலவு, ஈவுத்தொகை மற்றும் இடர் பிரீமியம் போன்ற தொடர்புடைய காரணிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நிறுவனத்திற்கான வட்டி வீத மாதிரியை அங்கீகரிக்க வேண்டும், மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கு வசூலிக்கப்படும் வட்டி வீதத்தை தீர்மானிக்க வேண்டும்.

மேலும், அந்த வழிகாட்டுதலில் கூறப்பட்டுள்ளதாவது:

- வட்டி வீதம் மற்றும் இடர் தரப்படுத்துவதற்கான அணுகுமுறை மற்றும் வெவ்வேறு வகை கடன் வாங்குபவர்களுக்கு வெவ்வேறு வட்டி வீதங்களை வசூலிப்பதற்கான காரணம் ஆகியவை கடன் வாங்குபவர்கள்/வாடிக்கையாளர்களுக்கு அனுமதி கடிதங்களில் தெரிவிக்கப்பட வேண்டும்.

- வாடிக்கையாளர்கள் தங்களுக்கு விதிக்கப்படும் கடன் வீதங்களுக்கான வாதம் மற்றும் வழிமுறையைப் புரிந்து கொள்ள உதவும் வகையில், நிறுவனத்தின் இணையதளத்தில் வட்டி வீத மாதிரியும் கிடைக்கப் பெறவேண்டும்.

இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலுக்கு இணங்க, நிறுவனத்திற்கான வட்டி வீத மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

## கடனுக்கான வட்டி வீதத்தை தீர்மானிப்பதற்கான கோட்பாடுகள்:

- இதர விஷயங்களுக்கு இடைய கேப்ஃப்ளோட் ஃபைனான்ஷியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் CapFloat Financial Services Private Limited உடைய ஈடிட்ட சராசரி நிதிச் செலவுகள், ஒதுக்க முடியாத அலுவலகச் செலவுகள் மற்றும் ALM பொருத்தமின்மைக்காக மேலும் சரிசெய்யப்படும் நிர்வாகச் செலவுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கேப்ஃப்ளோட் ஃபைனான்ஷியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (CapFloat Financial Services Private Limited) ஆனது வட்டி வீதங்களை

இறுதி செய்வதற்கான மாதிரியைக் கொண்டுள்ளது. வங்கி, NBFC லைன்கள், மாற்ற முடியாத கடனீட்டுப் பத்திரங்கள் (non-convertible debentures) போன்ற பல்வேறு ஆதாரங்களில் இருந்து மாத இறுதி நேரத்தில் கேப்ஃப்ளோட் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (CapFloat Financial Services Private Limited) இன் ஒட்டுமொத்தக் கடன்களின் விலையைக் கணக்கில் கொண்டு நிதிகளின் ஈடிட்ட சராசரி செலவு கணக்கிடப்படுகிறது.

- மேற்கூறப்பட்ட வீதம் பேங்கிங் & ஃபைனான்ஸ் கமிட்டிக் கூட்டத்தில் மதிப்பாய்வு செய்யப்படுகிறது.
- பல்வேறு வணிகப் பிரிவுகளுக்கான கடன்கள் மற்றும் அதன் கீழ் உள்ள பல்வேறு திட்டங்களுக்கான வட்டி வீதம், கேப்ஃப்ளோட் ஃபைனான்ஷியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (CapFloat Financial Services Private Limited) உடைய வட்டி வீத மாதிரி மூலமாக இறுதி செய்யப்படுகிறது, கடனுக்கான வட்டி வீதத்தை இறுதி செய்ய, இடர் காரணமான செலவு மற்றும் சம்பந்தப்பட்ட வணிகப் பிரிவிற்கான தவணைக்கால பிரீமியம், வணிக-குறிப்பான இயக்கச் செலவு மற்றும் ஈவு ஆகியவை சேர்க்கப்படுகின்றன.
- கேப்ஃப்ளோட் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (CapFloat Financial Services Private Limited) வழங்கும் பல்வேறு தயாரிப்புகளுக்கான இறுதி கடன் வீதம் பின்வரும் அளவுருக்களை கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகு இறுதி செய்யப்படும்: சந்தை நற்பெயர், வட்டி, தொடர்புடைய வணிகப் பிரிவில் கடன் மற்றும் பணம் கட்டத் தவறும் இடர், அதே மாதிரியான வாடிக்கையாளர்களின் வரலாறு ரீதியான செயல்திறன், கடன் வாங்குபவரின் சுயவிவரம், கடன் வாங்குபவருடனான உறவின் தவணைக்காலம், ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர் எனில் கடன் வாங்குபவரின் திருப்பிச் செலுத்தும் கடந்தகால பதிவு, கிடைக்கும் மானியங்கள், அனுமதிக்கப்பட்ட பிறழ்தல்கள், எதிர்கால சாத்தியம், குழு வலிமை, ஒட்டுமொத்த வாடிக்கையாளர் விளைபயன், முதன்மை

மற்றும் இணை பிணையத்தின் தன்மை மற்றும் மதிப்பு போன்றவை. கடன் வாங்கியவர் வழங்கிய தகவல், கடன் அறிக்கைகள், சந்தை நுண்ணறிவு மற்றும் கடனாளியின் வளாகத்தில் கள ஆய்வு மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இத்தகைய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

- வெவ்வேறு வாடிக்கையாளர்களால் ஒரே காலப்பகுதியில் ஒரே தயாரிப்பு மற்றும் தவணைக்காலத்திற்கு பெறப்பட்ட வட்டி வீதம் தரப்படுத்தப்பட வேண்டியதில்லை. மேற்கூறிய ஏதேனும் அல்லது ஒன்றிணைந்த காரணிகளை கவனத்தில் கொள்வதைப் பொறுத்து வெவ்வேறு வாடிக்கையாளர்களுக்கு இது மாறுபடலாம்.

- நுகர்வோர் கடன்களுக்கான செலவுகள் அற்ற EMI இல், வட்டி வீதம் வாடிக்கையாளரால் ஏற்கப்படாது மற்றும் வட்டி மானியமாக வணிகரால் செலுத்தப்படுகிறது. இந்த தயாரிப்புப்பொருட்களில் முன்கூட்டியே வழங்கப்படும் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. இந்த தயாரிப்புகளுக்கு வாடிக்கையாளர் வட்டி செலுத்துகிறார் ஆனால் ஒட்டுமொத்த அசல் மற்றும் வட்டி தயாரிப்பின் அசல் விலைக்கு சமமாக இருக்கும். இது வாடிக்கையாளர்களுக்கு அசல் விலைக்கு கூடுதல் விலை இல்லாமல் தயாரிப்பை திறம்பட வழங்கும்.

- வட்டி வீதங்கள் நிலையான அல்லது மாறக்கூடிய அடிப்படையில் வழங்கப்படலாம் மற்றும் தட்டையான அல்லது குறையும் மீதிமுறையில் வசூலிக்கப்படலாம்.

- மேலே உள்ளவற்றுக்கு, வருடாந்திர அடிப்படையில் குறையும் மீதி வீதத்தில் வட்டி வரம்பு 14 முதல் 36% வரை மாறுபடும்.

- வெவ்வேறு தயாரிப்புகள்/பிரிவுகளுக்கு மாதாந்திர அல்லது காலாண்டு வீதங்களில் வட்டி வசூலிக்கப்படலாம், இது வருங்கால வாடிக்கையாளர்களுக்கு செய்யப்படும் மற்றும் அடுத்தடுத்த கொள்கையில் பதிவு செய்யப்படும்.

- வட்டி வீதங்கள்/வட்டி வகை கடன் அனுமதி அளிக்கும்/பெறும்

நேரத்தில் வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கப்படும் மற்றும் வட்டி மற்றும் அசல் நிலுவைத் தொகைக்கான EMI பகிர்வு வாடிக்கையாளருக்குக் கிடைக்கப்பெறும்.

- தெரிவிக்கப்பட்ட தேதியில் வட்டி உடனடியாக செலுத்தப்பட வேண்டியதாக கருதப்படும் மற்றும் வட்டி செலுத்துவதற்கான சலுகை காலம் அனுமதிக்கப்படாது.
- சாதாரண வட்டியைத் தவிர, எந்தவொரு நிலுவைத் தொகையையும் செலுத்துவதில் தாமதம் அல்லது தவறுதலுக்கு நிறுவனம் கூடுதல்/அபராத வட்டியை விதிக்கலாம். வெவ்வேறு தயாரிப்புகள் அல்லது வசதிகளுக்கான இந்தக் கூடுதல் அல்லது அபராத வட்டிகள் அந்தந்த வணிகம்/தயாரிப்பு தலைவர்களால் தீர்மானிக்கப்படும்.

- வட்டி வீதங்கள் மற்றும் கட்டணங்களில் ஏற்படும் மாற்றங்கள் எதிர்காலத்திற்கானதாக இருக்கும் மற்றும் வட்டி அல்லது பிற கட்டணங்களின் மாற்றம் குறித்த தகவல் வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமானதாகக் கருதப்படும் ஒரு வழிமுறை மற்றும் விதத்தில் தெரிவிக்கப்படும்.

- வட்டி தவிர, பிற நிதிக் கட்டணங்களான செயலாக்கக் கட்டணம், தொடக்கநிலைக் கட்டணம், காசோலை திருப்பப்படும் கட்டணங்கள், தாமதமாக பணம் செலுத்துதல் கட்டணங்கள், மறு-அட்டவணைக் கட்டணங்கள், முன்கூட்டிய-பணம் செலுத்தல் / முன்கூட்டி கடனடைத்தல் கட்டணம், பகுதி பட்டுவாடாக் கட்டணங்கள், காசோலை இடமாற்றுக் கட்டணங்கள், பிணைய இடமாற்றுக் கட்டணங்கள், கணக்கு அறிக்கை வழங்குவதற்கான கட்டணங்கள் முதலியன, அவசியமாகக் கருதப்படும் இடங்களில் நிறுவனத்தால் விதிக்கப்படும். இந்தக் கட்டணங்கள் தவிர, முத்திரைத் தீர்வை, சேவை வரி மற்றும் பிற செஸ்கள் ஆகியவை வழங்கப்பட்ட ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி அவ்வப்போது பொருந்தக்கூடிய வீதங்களில் வசூலிக்கப்படும். இந்தக் கட்டணங்களில் எந்தத் திருத்தமும் வருங்கால விளைவைக் கொண்டிருக்கும் மற்றும் கடன் வாங்குபவருக்குத் தெரிவிக்கப்படும்.

- கட்டணங்களைத் தீர்மானிக்கும் போது, சந்தையில் போட்டியாளர்கள் பின்பற்றும் நடைமுறைகளும் கவனத்தில் கொள்ளப்படும்.

- பணத்தைத் திரும்பப்பெறுதல் அல்லது கட்டணங்கள் / அபராத வட்டி / கூடுதல் வட்டி ஆகியவற்றை தள்ளுபடி செய்வதற்கான உரிமைகோரல்கள் பொதுவாக நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படாது மேலும் அத்தகைய கோரிக்கைகளை கையாள்வது நிறுவனத்தின் முழு விருப்பத்திற்கு உட்பட்டது.

## வட்டி வீதம்:

- நிறுவனம் கடன் வாங்குபவருக்கு தெரிவிக்கக்கூடியவை: கடன் தொகை, வருடாந்திர வட்டி வீதம், திருப்பிச் செலுத்தும் காலம், கடனை அனுமதிக்கும் சமயத்தில் சமமாக பிரிக்கப்பட்ட மாதாந்திர தவணைகளின் தொகை (EMI).

## பேங்கிங் & ஃபைனான்ஸ் கமிட்டி:

- வட்டி வீதங்கள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படும் மற்றும் இந்தக் கொள்கையில் ஏதேனும் திருத்தம் செய்வது பேங்கிங் & ஃபைனான்ஸ் கமிட்டியால் தீர்மானிக்கப்படும், அதன்பின், ஒப்புதலுக்காக நிறுவனத்தின் இயக்குநர்கள் சபையில் சமர்ப்பிக்கப்படும்.

- அதனைப் பாதிக்கும் பல்வேறு கூறுகளுக்கு இணங்க, பல்வேறு தயாரிப்புப் பொருட்களுக்கான வட்டி வீதத்தைக் கணக்கிடுவதற்கான பொறிமுறையை வரையறுக்கும் வட்டி வீத பிரீமியம் பற்றிய குறிப்பு, அரையாண்டு இடைவெளியில் மதிப்பாய்வு மற்றும் ஒப்புதல் அழிப்பதற்கு இயக்குனர் சபைக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

- தயாரிப்பு வாரியாக குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வட்டி வரம்புகளைக் கொண்ட வட்டி வீத வரம்புகள் பற்றிய குறிப்பு மற்றும் அது மதிப்பாய்வு மற்றும் ஒப்புதலுக்காக காலாண்டு

இடைவெளியில் இயக்குனர் சபைக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

தயாரிப்பு வாரியான / துணை தயாரிப்பு வாரியான வட்டி வீத வரம்புகள் பின்வருமாறு:

| தயாரிப்பு | குறைந்தபட்ச வட்டி வீதம் % | அதிகபட்ச வட்டி வீதம் % |
|---|---|---|
| **பிணையமற்ற வணிக கடன்கள்** | 17 | 24 |
| **LTUBL (UBL3) (தட்டை வீதம்)** | 14 | 17.5 |
| **பேங்கிங் மாற்றாடல் (UBL2)** | 20 | 26 |
| **நுகர்வோர் நிதி (ஆன்லைன் செக்அவுட் உட்பட)** | **பங்காளர் வட்டி மானியம் பெற்றது** | 24 |
| **தனிநபர் கடன்கள் - சம்பளதாரர்** | 18 | 36 |
| **தனிநபர் கடன்கள் - சுயதொழில் செய்பவர்கள்** | 21.5 | 36 |

- ஒவ்வொரு தயாரிப்புப் பொருளிலும் பல்வேறு இடர் பிரிவுகளை இலக்காகக் கொண்ட பல்வேறு துணை தயாரிப்புப் பொருட்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு துணை தயாரிப்புப் பொருட்களுக்கான வட்டி வரம்பு வாடிக்கையாளரின் இடர் வரைவாக்கத்தைப் பொறுத்து வரம்பைக் கொண்டுள்ளது.

- ALCO (சொத்து பொறுப்புக் குழு) கூட்டம் நிதிகளின் செலவு போன்ற பல காரணிகளின் அடிப்படையில் பரந்த வட்டி வீத வரம்புகளை அவ்வப்போது தீர்மானிக்கிறது என்பதை நினைவில் கொள்ளவும்.

## கொள்கை பற்றிய மதிப்பாய்வு:

- கொள்கையானது வருடாந்தர இடைவெளியில் மதிப்பாய்வு செய்யப்படும் அல்லது தேவைப்படும் போது நிறுவனத்தின் இயக்குனர் சபையால் பரிசீலிக்கப்படும்.